மனதுக்குள் பூத்திருக்கும் பூ மகளே வந்து விடு
இருளுக்குள் புதைந்திருக்கும் தேசத்தை மீட்டுவிடு 2
இதயத்தை வருடுதம்மா தேசத்து வாசம் 2
உன் உதையம் காண ஏங்குதம்மா எம் சுவாசம்

நெஞ்சுக்குள் நின்று கனக்கும் நிலக்கடல் சிறு தீவே
சுதந்திரம் பூக்கும் நன்னால் வாசலுக்கு வந்திடுமோ 2
வானத்தின் கீழ் திசையில் கருத்தரிக்கும் கதிரொலியே 2
ஈழத்தில் இருள் அகன்று இன்னல்கள் தொலைந்திடுமோ
இன்னல்கள் தொலைந்திடுமோ

தாயே காலம் எல்லாம் உன் மடி தேடுகிறோம்
சுவாசம் எல்லாமே உன் மொழி பாடுகிறோம் 2

மனதுக்குள் பூத்திருக்கும் பூ மகளே வந்து விடு
இருளுக்குள் புதைந்திருக்கும் தேசத்தை மீட்டுவிடு 2
இதயத்தை வருடுதம்மா தேசத்து வாசம் 2
உன் உதையம் காண ஏங்குதம்மா எம் சுவாசம்

நீர் விழியில் தோன்றி மறையும் எம் ஊர் நந்தவனமே
கார் முகில் கிழித்து உம் செய்தி காதில் வீழுமோ 2
விடுதலையின் வீரம் பேசும் வெண்பனி காற்றே 2
கடுகதியின் காவியத்தின் கதை சொல்லி வருவாயோ
கதை சொல்லி வருவாயோ

தாயே காலம் எல்லாம் உன் மடி தேடுகிறோம்
சுவாசம் எல்லாமே உன் மொழி பாடுகிறோம் 2

மனதுக்குள் பூத்திருக்கும் பூ மகளே வந்து விடு
இருளுக்குள் புதைந்திருக்கும் தேசத்தை மீட்டுவிடு 2
இதயத்தை வருடுதம்மா தேசத்து வாசம் 2
உன் உதையம் காண ஏங்குதம்மா எம் சுவாசம்